விமான நிலையம்-மெப்ஸ் வரை

# மெட்ரோ ரெயில் பயணிகளுக்கு வேன் சேவை தொடக்கம்

சென்னை, பிப்.27-
சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் பொதுமக்கள் பயன்பாட்டுக்காக பல்வேறு போக்குவரத்து இணைப்பு சேவைகளை அறிமுகப்படுத்தி வருகிறது. அந்தவகையில் ஷேர் ஆட்டோ, டாக்சி, மினி பஸ் சேவை, மின்சார மோட்டார் சைக்கிள், சைக்கிள் போன்ற வசதிகளை வழங்கி வருகிறது.

இந்த நிலையில் கூடுதலாக விமான நிலைய மெட்ரோ ரெயில் நிலையம் முதல் மெப்ஸ் வரை ஏசி 'டெம்போ' வேன் இணைப்பு சேவை ரூ.20 கட்டணத்தில் தொடங்கப்பட்டது. இந்த சேவை 30 நிமிட இடைவெளியில் இயக்கப்படும்.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் ஏற்கனவே விமான நிலையம் முதல் பம்மல் வரை 5 வேன் சேவையும், 1 ஏசி 'டெம்போ' வேன் சேவை வழங்கி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக விமான நிலையம் முதல் மெப்ஸ் வரை கூடுதலாக ஏசி வசதியுடன் கூடிய 'டெம்போ' வேன் சேவை தொடங்கப்பட்டுள்ளது.